# சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை 2021-2022 ஆம் நிதியாண்டு ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-இல் ஆணையிடப்பட்டவாறு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 535/எம்.2/2017, நாள். 26.10.2017-இன்படி சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளை பத்திரமானது 01.11.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண். BKIV/36, நாள்.01.11.2017-இன்படி சிவகங்கை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை | 1 | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை. |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை. | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை. |
| 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சிவகங்கை. | 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சிவகங்கை. |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை. | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை. |
| 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) | 5 | துணை இயக்குநர், சுகாதாரபணிகள், சிவகங்கை. |
| 6 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சிவகங்கை. | 6 | முதன்மைக் கல்வி அலுவலர், சிவகங்கை. |
| 7 | மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், சிவகங்கை. | 7 | மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை. |
| 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சிவகங்கை. | 8 | மாவட்ட சமூக நல அலுவலர், சிவகங்கை. |
| 9 | மாவட்ட வன அலுவலர், சிவகங்கை. | 9 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள், சிவகங்கை. |
| 10 | முதன்மைப் பொறியாளர், (பொ.ப.து./ நீ.ஆ.அ), சிவகங்கை | | |
| 11 | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, சிவகங்கை. | | |
| 12 | மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை. | | |
| 13 | மாவட்ட சமூக நல அலுவலர், சிவகங்கை. | | |
| 14 | துணை இயக்குநர், சுகாதாரபணிகள், சிவகங்கை. | | |
| 15 | இணை இயக்குநர், விவசாயம், | | |
| 16 | ஆய்வாளர், தொழிலாளர் நலத்துறை, சிவகங்கை. | | |

2) சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பாரத வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37301947887) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்டகனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) சிவகங்கை மாவட்டத்தில் 1 பெருங்கனிம குவாரியும், 22 சிறுகனிம குவாரி உரிமங்கள் நடப்பிலுள்ளன. இவற்றில் 09 சிறுகனிம குவாரி மற்றும் 1 பெருங்கனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு முன்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள 13 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு பின்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

4) சிவகங்கை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2021 வரை வங்கி கணக்கில் **ரூ.77,86,876/- (ரூபாய் ஏழு இலட்சத்து எண்பத்தாயிரத்து எண்ணூாற்று எடுபத்து ஆறு மட்டும்)** இருப்பில் உள்ளது.

5) 2021-2022 ஆம் நிதியாண்டில் சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக ரூ. 35,50,000/- மதிப்பிலான கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமையா / பிறமுன்னுரிமைத் திட்டமா |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டுமானப் பணி | சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் மாணவிகளின் தங்கும் விடுதி முதல் "A" வகை குடியிருப்பு வரை மற்றும் நிர்வாக பிரிவு முதல் ஆசிரியர்கள் பிரிவு வரை செல்லும் தார் சாலையினை புணரமைப்பு செய்தல். | ரூ. 16,50,000/- | செயற்பொறியாளர், (பொ.ப.து), கட்டட (க & பரா) கோட்டம், மருத்துவப்பணிகள், சிவகங்கை. | பிற முன்னுரிமைத் திட்டம் |
| 2. | கட்டுமானப் பணி | சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், அரசு மருத்துவனையில் பழுதடைந்ததைச் சரிசெய்தல் | ரூ. 19,00,000/- | | பிறமுன்னுரிமைத் திட்டம் |

2021-2022 ஆம் நிதியாண்டில் சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட பிற செலவினங்களுக்காக ரூ. 13,28,866/- செலவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | செலவின விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | மார்ச் - 2021 மாதம் முதல் நவம்பர் மாதம் வரை சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலக செலவினங்களுக்காக 1% தொகை வழங்கப்பட்டது. | 10,429.10/- |
| 2. | சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை நிர்வாக அலுவலக செலவினங்களுக்காக 6% தொகையை யூனியன் பேங்க் ஆப் இந்தியா, சிவகங்கை கணக்கில் வரவு வைக்கப்பட்டது. | 12,22,898.09 |
| 3. | சேவை கட்டணத் தொகை | 531 |
| 4. | I Pad, Elcot நிறுவனம் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டது | 95,008 |
| | மொத்தம் | 13,28,866.19/- |

சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளையின் 2021-2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்குள் மத்திய அரசால் அங்கிகரிக்கப்பட்ட பட்டய கணக்காளர் VSK and Associates, காரைக்குடி மூலம் தணிக்கை செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது சிவகங்கை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை முன்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

தலைவர்,
சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை.